காலைக்கதிர் (09.09.2021)

# கட்டணமில்லா பட்டயப்படிப்பு 5 மாணவருக்கு அனுமதி கடிதம்

கரூர் செப். 9–

டி.என்.பி.எல்., சார்பில் கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்புக்கு, ஐந்து மாணவ, மாணவியருக்கு அனுமதி கடிதம் வழங்கப் பட்டது.

கரூர் மாவட்டம் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன வளாகத்தில் சமுதாய நலத்திட்டப் பணியின் கீழ் கட் டணமில்லா தொழிற் பட்டயப் படிப்பு கல்வி பயில கடிதம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தலைமை வகித்தார். திருச்சி சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னா லஜியில் காகிதப்பிரிவில் சேரு வதற்கு, சராசரி மதிப்பெண்கள் அடிப்படையில் குணசீலன், சூர்யபிரசாத், ரேவதி, சண்மு கநாதன், ரோஷினி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இவர் களுக்கு தொழிற் பட்டயப்ப டிப்பு பயில்வதற்கான அனுமதி கடிதங்கள் வழங்கப்பட்டன.

முதன்மை பொது மேலாளர் குஷால் பால் சிங், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம், பொது மேலாளர் மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.




■ டி.என்.பி.எல்., சார்பில் கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்புக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அனுமதி கடிதத்தை செயல் இயக்குனர் கிருஷ்ணன் வழங்கினார்.

**தினத்தந்தி (09.09.2021)**




தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில்

# 5 மாணவர்களுக்கு தொழிற்கல்வி பட்டயப்படிப்பு ஆவண கடிதம்

கரூர், செப்.9-

தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி, சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் காகிதப்பிரிவில் 3½ ஆண்டு கால கட்டணமில்லா தொழிற்பட்டயப்படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்வி கட்டணம், விடுதிக்கட்டணம் உள்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கட்டணமில்லா கல்வி அளித்து வருகிறது. அந்தவகையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலத்திட்ட பணியின் கீழ் கட்டணமில்லா தொழிற்பட்டயப்படிப்பு கல்வி பயில ஆவணக்கடிதம் வழங்கும் நிகழ்ச்சி காகித நிறுவன வளாகத்தில் நடைபெற்றது.இதில், செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் குஷால் பால் சிங், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் மற்றும் பொது மேலாளர் (ஆற்றல்) மோகன் ஆகியோர் கலந்து கொண்டு 5 மாணவர்களுக்கு தொழிற்பட்டயப்படிப்பு பயில்வதற்கான ஆவண கடிதங்களை வழங்கினர்.

மாலை மலர் (09.09.2021)




தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தொழிற்கல்வி பட்டயப்படிப்பு ஆவண கடிதத்தை மாணவருக்கு வழங்கிய போது எடுத்த படம். அருகில் அதிகாரிகள் உள்ளனர்.

கரூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# 5 மாணவர்களுக்கு தொழிற்கல்வி பட்டயப் படிப்பு ஆவண கடிதம்

## செயல் இயக்குநர் வழங்கினார்

கரூர், செப்.9-

தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சி, சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் காகித தப்பிரிவில் மூன்றரை ஆண்டு கால கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு பயில ஆண்டு தோறும் 5 மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதி கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கட்டணமில்லா கல்வி அளித்து வருகிறது.

கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை, அலகு-1 சுற்றி அமைந்துள்ள புஞ்சை புகளூர், புஞ்சை தோட்டக்குறிச்சி, த மிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை ஆகிய பேரூராட்சிகள் மற்றும் நஞ்சை புகளூர், புன்னம், கோம்புபாளையம், திருக்காடுதுறை, வேட்டமங்கலம், ஆகிய ஊராட்சிகள், திருச்சி மாவட்டத்தில் அலகு-2 சுற்றி அமைந்துள்ள மொண்டிப்பட்டி, கே.பெரியப்பட்டி, சித்தாநத்தம், பாதிரிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் நிரந்தரமாக வசிப்பவராக இருந்து பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதன் முறையில் தேர்ச்சி பெற்று 60 சதவிகிதத்திற்கும் மேலாக மதிப்பெண் பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

தேர்வில் அறிவியல் மற்றும் கணிதப்பாடங்களில் பெற்ற சராசரி மதிப்பெண்கள் அடிப்படையில் குணசீலன், சூர்யபிரசாத், ரேவதி, சண்முகநாதன், ரோஷினி ஆகிய 5 மாணவ மாணவிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த திட்டத்தின் மூலம் 52 மாணவர்கள் கட்டணமில்லா தொழிற்பட்டயப் படிப்பு முடித்து பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். மேலும் இக் கல்வியாண்டில் 21 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் இலவச தொழிற்கல்வி படித்து வருகின்றனர். இத்திட்டத்திற்காக காகித நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் மூலம் இந்த கல்வியாண்டில் 7 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான நிகழ்ச்சி அண்மையில் காகித நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் குஷால்பால் சிங், பொது மேலாளர் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம் மற்றும் பொது மேலாளர் (ஆற்றல்) மோகன் கலந்து கொண்டு தொழிற் பட்டயப்படிப்பு பயில்வதற்கான ஆவண கடிதங்களை பெற்றோருடன் வந்திருந்த மாணாக்கர்களுக்கு வழங்கி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பெற்றோரும், மாணவர்களும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்திற்கு தங்களது நன்றி கூறினர்.

தினமலர் (13.092021)

# டிஎன்பிஎல் கல்வி உதவித்தொகை வழங்கல்

வேலாயுதம்பாளையம், செப். 13-

திருச்சி சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்வி நிறுவனத்தில் காகிதப்பிரிவில் மூன்றரை ஆண்டு தொழிற்பட்டய படிப்பு பயில ஆண்டுதோறும் 5 மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி டிஎன்பிஎல் நிறுவனம் இலவச கல்வி அளித்து வருகிறது.

அதற்காக டிஎன்பிஎல் நிறுவனம் அலகு 1 மற்றும் 2 ஐ சுற்றி உள்ள ஊராட்சிகளில் நிரந்தரமாக வசித்து குறைந்தபட்சம் 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் முறையாக தேர்ச்சி பெற்று 60 சத வீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அவர்கள் 10ம் வகுப்பு தேர்வில் அறிவியல், கணித பாடங்களில் பெற்ற சராசரி மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசையின்படி



டிஎன்பிஎல் வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் டிஎன்பிஎல் செயல் இயக்குனர் கிருஷ்ணன், முதன்மை பொதுமேலாளர் குஷால்பால்சிங், பொதுமேலாளர்கள் டேவிட் மாணிக்கம், மோகன் ஆகியோர் மாணவர்களிடம் இலவச தொழிற்பட்டயப்படிப்பு பயிலுவதற்கான ஆவண கடிதங்களை வழங்கினர்.

குணசீலன், சூர்யபிரசாத், ரேவதி, சண்முகநாதன், ரோஷினி ஆகிய 5 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 52 மாணவர்கள் இலவச தொழிற்பட்டய படிப்பை முடித்து பல நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இப்போது 21 மாணவர்கள் இலவச தொழிற்கல்வி பயின்று வருகின்றனர். இதற்காக டிஎன்பிஎல் நிறுவனம் தனது சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ் ரூ. 7லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

டிஎன்பிஎல் வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் டிஎன்பிஎல் செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (போர்டு பிளான்ட்) குஷா ல்பால் சிங், பொதுமேலாளர்கள் (மனிதவளம்) டேவிட் மாணிக்கம், (எனர்ஜி) மோகன் ஆகியோர் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரிடம் இலவச தொழிற்பட்டயப் படிப்பு பயிலுவதற்கான ஆவண கடிதங்களை வழங்கினர்.